கடன் ஒப்பந்தம்

-------------------------------------------------------------------: தேதி இந்த கடன் ஒப்பந்தம் திருவாளர்கள் இந்துஜா லேலண்ட் பைனான்ஸ் லிட், (கம்பெனி சட்டம் 1956 கீழ் பதிவு செய்யப்பட்டது), எண்.1, சர்தார் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை-600 032-இல் பதிவு அலுவலமாக கொண்டும், எண். 27A, டெவலப்டு இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை-600 032-இல் கார்ப்பரேட் அலுவலகமாக கொண்டும் --------------------------------------------------------மாநில அலுவலமாக கொண்டு இயங்கி வருகிறது. இவர் இங்கு கடன் கொடுப்பவர் என்றும் அச்சொல் அவர்களுடைய தொடர்ச்சியாளர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்டவர்களைக் குறிக்கும். இவர்கள் இங்கு முதல் பார்டியாவர்.

மற்றும்

---------------------------------------: இந்திய குடிமகன், உரிமையாளர் கூட்டு நிறுவனம் / தனியார் நிறுவனம் இந்திய கூட்டு நிறுவன சட்டம் 1932 / இந்திய கம்பெனி சட்டம் 1956-இன் கீழ் பதிவு செய்யப்பட்டது. குடியிருப்பு / பிரதான அலுவலகம் / -----------------------------------------: உள்ளது. இவர் இங்கு கடன் பெறுபவர் என்றும் இச்சொல் அவர்களுடைய தொடர்ச்சியாளர்கள், சட்டப்பிரதிநிதிகள், வாரிசுகள், அமுலாக்கர்கள், நிர்வாகஸ்தர்கள் மற்றும் அங்கீகரிக்கப் பட்டவர்களைக் குறிக்கும். இவர்கள் இங்கு 2-வது பார்டியாவர்.

அப்படியிருக்க

அ) கடன் பெறுபவர் ------------------------------ என்று அடையாளம் காண்பிக்கப்பட்டு தன் சொந்த உபயோகத்திற்காக சொத்தை வாங்க முடிவு செய்து அதற்க்காக கடன் கொடுப்பவரை அணுகி தனக்கு ரூ.----------------------------/- (ரூபாய்-------------------------) சொத்து வாங்குவதற்காக கடன் கொடுக்குமாறு வேண்டி, அந்த சொத்து கீழே சொத்து விவரத்தில் விவரமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆ) கடன் பெறுபவரும் அத்தாட்சி அளிப்பவரும் கொடுத்த உத்திரவாததின் பேரில் கடன் கொடுப்பவர், கடன் பெறுபவருக்கு கீழ்கண்ட சட்ட திட்டங்களுகு உட்பட்டு கடன் கொடுக்க சம்மதிக்கிறார்.

**சட்டதிட்டங்கள்:**

1.1 இந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டவைகளுக்கு பின்வருமாறு பொருள் கொள்ளுதல்:

அ) முதல் அட்டவணை மற்றும் 2-வது அட்டவணை என்பது இந்த ஒப்பந்ததில் உள்ள முதல் அட்டவணை மற்றும் 2-வது அட்டவணையைக் குறிக்கும்.

ஆ) கடன் என்பது இந்த ஒப்பந்தம் மற்றும் முதல் அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள நிபந்தனை 2.1-இல் குறிப்பிடப்பட்டவை ஆகும்.

இ) திருப்பி செலுத்துதல் என்பது இந்த ஒப்பந்தத்தில் கண்ட நிபந்தனைப்படி முதல், வட்டி மற்றும் இதர கட்டணங்கள் ஆகியவை நிபந்தனை 2.9-இல் குறிப்பிடப்பட்டவை ஆகும்.

ஈ) முன்பாக செலுத்துவது என்பது கடன் கொடுப்பவா் விதித்துள்ள நிபந்தனைகள் படி கால கெடுவுக்குள் திருப்பி செலுத்துதல் ஆகும். மேலும் திருப்பி செலுத்தும் போது உள்ள நிபந்தனைப்படி செலுத்த வேண்டும்.

உ) சொத்து என்பது வாகனமோ அல்லது இயந்திரமோ ஆகும். அதை வாங்குவதற்காக கடன் வழங்குபவா் ஒப்புக் கொண்டு அதற்காக கடன் பெறுபவா் அந்த சொத்தை அடமானமாக கடன் கொடுப்பவருக்கு கொடுக்க வேண்டும்.

ஊ) வட்டி மற்றும் விகிதம் என்பது ஒப்பந்தத்தின் பத்தி 2.2-இல் சொல்லியுள்ள வட்டி விகிதமாகும்.

எ) தவணை என்பது 2-வது அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள மாதாந்திர தொகையை செலுத்துவதாகும். அதன் மூலம் கடன் தொகையை வட்டியுடன் சோ்த்து கடன் பெறுபவா் அடமான காலத்திற்குள் செலுத்துவதாகும்.

ஏ) முன் தேதியிட்ட காசோலை என்பது கடன் பெறுபவரால் செலுத்தப்படும் தவணைத் தொகைக்காக கடன் கொடுத்தவருக்கு முன் தேதியிட்ட காசோலையை கடன் கொடுப்பவா் பெயரில் ஒவ்வொரு தவணை செலுத்தப்படும் நாளுக்கு பொருந்துவதாக கொடுப்பதாகும்.

1.2 கடன் பெறுபவா் என்பது கடன் பெறுபவரைக் குறிக்கும். கடன் பெறுபவா் பலராக இருப்பின் கடன் பொறுப்பு அனைவரையும் குறிக்கும். அதே போல் உத்திரவாதம் அளிப்பவா் அனைவரையும் குறிக்கும்.

1.3 சட்டதிட்டங்களும் கூற்றுக்களும் இங்கே குறிப்பாக சொல்லப்படவில்லை என்றால் அவை ஜெனரல் கிளாஸஸ் ஆக்ட் 1897 படி விளக்கப்பட்டுள்ளது. இங்கே குறிப்பாக சொல்லப்படாத கூற்றுக்களும், சொற்றடா்களும் இடத்திற்கு தக்கவாறு ஜெனரல் கிளாஸஸ் சட்டபடி பொருள் கொள்ளப்படும்.

1.4 எல்லா பொருள்களும் ஒருமையில் சொல்லப்பட்டிருந்தால் அவை தேவைப்படும் இடங்களில் பன்மையாக எடுத்துக் கொள்ள வேண்டும். அதே போல் பாலினங்களும் மாற்றிக் கொள்ள வேண்டும்.

**கடன், வட்டி:-**

கடன் தொகை மற்றும் தவணைக் காலம்,

2.1 (அ) கடன் கொடுப்பவர், கடன் பெறுபவருக்கு அட்டவணையில் கூறப்பட்டிருக்கும் சொத்தை வாங்குவதற்காக, முதல் அட்டவணையில் சொல்லப்பட்ட தொகையை இவ்வொப்பந்தத்தில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு கடன் அளித்துள்ளார்.

(ஆ) இவ்வொப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள கடனானது முதல் அட்டவணையில் கூறப்பட்ட காலத்திற்குள்ளும், இரண்டாவது அட்டவணையில் கூறப்பட்டுள்ள தேதிகளில் செலுத்தப்பட வேண்டியது.

**2.2 வட்டி:**

வட்டி விகிதங்கள் முதல் அட்டவணையில் கூறப்பட்டுள்ளவாறு விதிக்கப்படும். வட்டியானது ஒவ்வொரு மாதமும் கூட்டு வட்டி விகிதத்தில் நிலுவையில் உள்ள தொகைக்கு கணக்கிடப்படும். நிலுவை தொகையானது கடன் பாக்கி, கட்டணங்கள், அபராதங்கள், செலவுகள் அனைத்தின் மீதும் கணக்கிடப்படும்.

2.3 (அ) முதல் அட்டவணையில் சொல்லப்பட்டிருக்கும் வட்டி விகிதம் இந்த கடன் முடியும் வரை நிலையாக இருக்கும். ரிசர்வ் வங்கி அல்லது சீர்திருத்த துறை அவ்வப்பொழுது பணச் சந்தையில் ஏற்படும் மாற்றத்திற்கு ஏற்ப இந்த வட்டி விகிதமும் மாறும். அத்தருணங்களில் முதல் அட்டவணையில் சொல்லப்பட்டிருப்பதைத் தவிர கடன் பெறுபவர் மாற்றியமைக்கப்பட்ட வட்டியை செலுத்த ஒப்புக் கொள்கிறார். அவ்வாறு மாற்றி அமைக்கப்பட்ட வட்டியானது இந்த ஒப்பந்தத்தால் சொல்லப்பட்ட வட்டியாக கருதப்பட வேண்டும்.

ஆ) கடன் பெறுபவர், கடன் கொடுத்தவரிடம் இருந்து திரும்பிப் பெறவோ அல்லது கொடுக்கவோ அல்லது கடன் கொடுத்தவர் மத்திய மாநில அரசாங்கத்திற்கு செலுத்தும் அல்லது செலுத்தப்பட்ட தொகைகளுக்கு ஏற்றவாறு வட்டி விதிக்கப்படும். மத்திய, மாநில அரசுகள் சட்டத்தில் ஏதாவது மாற்றங்கள் செய்தால் அல்லது புதிய சட்டங்கள் இயற்றி அமுலுக்கு கொண்டுவந்தால் இந்த திரும்பிப் பெறப்படும் அல்லது செலுத்தப்படும் தொகையை கடன் பெறுபவர், கடன் கொடுத்தவர் கேட்கப்படும் பொழுது திருப்பி கொடுக்க வேண்டும்.

2.4 கடன் வழங்கும் முறை

மத்திய, மாநில அரசுகளால் வட்டிகளின் மேல் விதிக்கப்படும் வரிகளை கடன் கொடுத்தவர் அரசுக்கு செலுத்தும் பட்சத்தில், கடன் பெறுபவர் கடன் கொடுத்தவருக் அவற்றை திருப்பி கொடுக்க கடமைப்பட்டவர். கடன் பெறுபவருக்கு கடன் கொடுப்பவர் கடன் தொகையை விநியோகிக்கும் முறையை குறிப்பிட வேண்டும். இருப்பினும் கடன் கொடுப்பவரின் முடிவே கடனை கொடுக்கும் முறையில் இறுதியானதாகும். புதிய வாகனம் வாங்குவதற்காக கடன் இருப்பின் அந்தக் கடனை கொடுப்பவர் நேரிடையாக தயாரிப்பாளர்களிடமோ அல்லது விற்பனை யாளர்களிடமோ கொடுப்பர். அது கடன் கொடுப்பவர் கடன் பெறுபருக்கு கொடுத்ததாக கருதப்பட வேண்டும். உபயோகிக்கப் பட்ட சொத்துக்களை வாங்கும் போது கடனை கொடுக்கும் முறையை

கடன் கொடுப்பவர் தான் நிர்ணயிப்பார். அதாவது நேரிடையாக சொந்தக்காரரிடமோ அல்லது விற்பனையாளரிடமோ அல்லது கடன் வாங்குபவரிடமோ கடன் கொடுப்பவர் கொடுக்கலாம்.

2.5 கடன் கொடுக்கும் முறை

எல்லா கடன் தொகைகளும் கடன் கொடுப்பவர் கடன் பெறுபவருக்கு இந்த ஒப்பந்தத்தின் கீழ் கண்ட நிபந்தனைகள் படி செலுத்துவார். ஆதை கோடிட்ட காசோலையாகவோ அல்லது கணக்கு வைப்பு காசோலையாகவோ, கேட்பு காசோலையாகவோ சுலபமாக ஒப்புக் கொள்ளப்படும் முறையில் (இந்திய வங்கி முறை) கடன் கொடுப்பவரின் விருப்பம் போல் கொடுக்கப்படும். கட்டணங்கள் அல்லது மற்ற செலவுகளை அதாவது காசோலைக்கான கட்டணங்கள் ஆகியவை கடன் பெறுபவரின் செலவே ஆகும். ஆவை காசோலை மற்றும் காலத்தைப் பொருத்தது.

2.6 கடன் வழங்குவதில் நிபந்தனை

கடன் கொடுப்பவர் கடன் பெறுபவருக்கு ஓர் அறிவிப்பு மூலம் கடன் விநியோகிப்பதை ரத்து செய்யவோ நிறுத்தி வைக்கவோ அல்லது மேலும் கொடுக்கவோ அதிகாரம் படைத்தவர்.

2.7 கணக்குப் பட்டியல் அல்லது நிலுவைத் தொகையை உறுதி படுத்துதல்

ஒவ்வொரு வருடமும் மார்ச்சு மாதம் 31ஆம் தேதி கடன் கொடுப்பவர் கடன் பெறுபவருக்கு கணக்குப் பட்டியல் அனுப்புவார். அதில் நிலுவை தொகை, வட்டி பெற்றது முதலியவை குறிக்கப் பட்டிருக்கும். கடன் பெறுபவர் அந்த கணக்குப் பட்டியலை மார்ச்சு 31 ஆம் தேதி பெறாவிட்டால் 15 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும். அதில் உள்ள முரண்பாடுகளை 15 நாட்களுக்குள் குறிப்பிடவேண்டும். இந்த கடன் பட்டியலை சான்றிட்ட தபால் மூலம் அனுப்ப வேண்டும். அதை கடன் பெறுபவர் பெற்று இங்கு சொல்லப்பட்டவைகளுக்கு எதிர் மறையாக இருந்தாலும் அதில் கண்ட தொகை சரி என்றும், மீதத் தொகை போன்றவையும் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டதாகும்.

2.8 செயல்முறை கட்டணங்கள்

கடன் பெறுவர் முதல் அட்டவணையில் சொல்லியபடி செயல் முறை கட்டணங்களை கடன் கொடுப்பவருக்கு மனுவை சமர்ப்பிக்கும் போது மனுக்கட்டணம், செயல்முறைக் கட்டணம் ஆகியவை செலுத்த வேண்டும். கடன் பெறுபவர் தனக்கு கடன் வேண்டும் என்று முடிவு செய்தால் (கடனை அங்கீகரிப்பதற்கு முன்பாக அல்லது அங்கீகரிப்பு கடிதம் கொடுப்பதற்கு முன்பாக) இருந்தால் மட்டுமே அப்பணம் திருப்பி கொடுக்கப்படும்.

2.9 கடனை திருப்பி செலுத்துதல்

1) கடன் பெற்றவர் கடனையும் வட்டியையும், தவணை முறையில் திருப்பி செலுத்த வேண்டும். தவணைத் தொகை நாள், தவணை எண்ணிக்கை ஆகியவைகள் 2-வது அட்டவணையில்

விவரிக்கப்பட்டிருக்கும். இந்த திருப்பி செலுத்தும் தொகை, வட்டித் தொகையை கடன் கொடுப்பவரின் உரிமையை பாதிக்காமல் இந்த ஒப்பந்தத்தின் கீழ் செலுத்த வேண்டும். மேலும், தவணைத் தொகையை நிர்ணயித்தல் போன்றவை கடன் கொடுப்பவரின் உரிமையை பாதிக்காமல் இந்த 2-வது அட்டவணையில் விவரிக்கப்பட்டிருக்கும் தவணை தொகையானது கடன் கொடுப்பவரின் இவ்வொப்பந்தத்தின் படி முழு தொகையையும் கோரும் உரிமையை எவ்விதத்திலும் பாதிக்காது. மேலும் இத்தவணை தொகையை மாற்றி கணக்கிடும் உரிமை கடன் கொடுப்பவருக்கு உண்டு. அவ்வாறு மாற்றி அமைக்கப்பட்ட தவணை தொகையையும் கடன் பெறுபவர் செலுத்த கடமைபட்டவர், நிர்ணயிக்கப்படும் தவணைத் தொகை, வட்டி ஆகியவை எந்தத் தருவாயிலும் வசூலிக்கப்படும்.

2) காலமே இந்த ஒப்பந்தத்தின் முக்கிய நிபந்தனை ஆகும் என்று கடன் பெறுபவரும் உத்திரவாதம் அளிப்பவரும் ஒப்புக் கொள்கின்றனர்.

3) தவணைத் தொகையை செலுத்தும் நாள் முதல் தொடர்ந்து செலுத்த வேண்டும். இடையில் சொத்தை கடன் பெறுபவரிடம் தயாரிப்பாளர் ஒப்படைக்காவிட்டாலும் அல்லது ஏதாவது தகராறுகளை கடன் பெறுபவர் எதிர் நோக்க நேரிட்டாலும், தடை செய்யப்பட்டாலும், ஏதாவது புகார்கள், குறைகள் ஏற்பட்டாலும், தயாரிப்பாளருடன் தகராறுகள் ஏற்ப்டடாலும், சொத்தை கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும், தவணைத் தொகையை தொடர்ந்து செலுத்த வேண்டும்.

4) உரிய நாளில் தவணைத் தொகையை செலுத்தும் படி அறிவிப்போ, மறு அறிவிப்போ செய்யாவிட்டாலும் உரிய நாளில் செலுத்த வேண்டும். ஒழுங்காக, முறையாக தவணைத் தொகையை செலுத்துவது குறித்து கடன் பெறுபவர் உத்திரவாதம் அளிக்க வேண்டும்.

5) இந்த ஒப்பந்தத்தின் கீழ் கடன் கொடுப்பவரின் உரிமை பாதிக்கப்படாமல் சட்டப்படி செய்ய வேண்டும். ஏதாவது ஒரு தவணைத் தொகை கால தாமதமாக கொடுக்க நேரிட்டால் அத்தருணத்தின் அத்தொகை மீது கூடுதல் வட்டி வசூலிக்க முதல் அட்டவணையில் சொல்லியபடி கடன் கொடுப்பவருக்கு உரிமையுண்டு. அதே போல் அசல் தொகையையும், வட்டியையும் தவறாக செலுத்தினால் அப்பொழுதும் இவ்வாறு வசூலிக்கப்படும். இவ்வாறு செலுத்தாத தொகை குறித்து கடன் கொடுப்பவர் தகராறு செய்ய உரிமை உண்டு. அதை இந்த ஒப்பந்தத்தின் 23-வது நிபந்தனையில் சொல்லியபடி ஒரு நடுவருக்கு தெரியப்படுத்தலாம்.

மேலே சொன்ன கூடுதல் கட்டணம் முறையாக செலுத்தப்படும் தொகையை பாதிக்கக் கூடாது. இது கடன் கொடுக்க ஒரு முக்கிய நிபந்தனை ஆகும்.

6) பாக்கித் தொகை மற்றும் வட்டி கணக்கீடு குறித்து தகராறு எழுப்பப்பட்டால் அத்தருணத்தில் கடன் பெறுபவர் தான் செலுத்தும் தவணைத் தொகையை நிறுத்தி வைக்கக் கூடாது.

2.10. தவணைத் தொகை செலுத்தும் முறை

1) இந்த திருப்பி செலுத்தம் தொகையை பின் தேதியிட்ட காசோலை மூலம் அல்லது பணமாக அல்லது கேட்புக் காசோலை மூலமாக அல்லது ஒத்துக் கொள்ளும் வகையில் கடன் பெறுபவர் செலுத்தலாம், வேறு வழியிலும் தொகையை இந்திய வங்கிகள் முறைப்படி குறிப்பிட்ட நாளில் 2-வது அட்டவணையில் விவரித்தப்படி பெயர் மாற்றம் செய்யலாம். இந்த திருப்பி செலுத்தம் முறை சொத்தை பெற்றுக் கொண்டாலும் இல்லாவிட்டாலும் 2-வது அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளது. இந்தக் கடனை கொடுப்பதற்கு திருப்பி செலுத்தும் அட்டவணை ஒரு முக்கியமான நிபந்தனை என்பதனை கடன் பெறுபவர் ஒப்புக் கொள்ள வேண்டும்.

2) கடன் பெறுபவர் பின் தேதியிட்ட காசோலை மற்றும் காப்பீடு காசோலை வங்கியில் செலுத்துவதற்கு முன் எந்தவித அறிவிப்போ மறு அறிவிப்போ தகவலோ கொடுக்கப்பட மாட்டாது.

3) நிபந்தனை 2.10 –ஏ படி கடன் பெறுபவர் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட பின் தேதியிட்ட காசோலையைக் கடன் கொடுப்பவரிடம் கொடுத்த பின்,

அ) கடன் கொடுப்பவர் தன் வசம் காசோலை இருக்கும் போது அதைத் தொலைத்தாலோ, அழித்தாலோ, கைமாற்றி வைத்து விட்டாலோ

ஆ) காசோலையை கையெப்பம் இடுபவர் / இடுபவர்கள் இறப்பினால் பணமாக்க முடியாமல் போனாலோ, நொடித்துப் போனாலோ, ரத்து செய்யப்பட்டாலோ, இந்த செய்தியை கடன் பெறுபவருக்கு தெரிவித்தவுடன் அவர் அவ்வாறு தொலைக்கப்பட்ட காசோலைக்குப் பதிலாக வேறு காசோலை கொடுத்து அதை பணமாக்க முடியாமல் போனாலோ அல்லது நிபந்தனை 2.10 (சி) (ii) -இல் சொல்லிய காரணங்களினால் காசோலையை கடன் கொடுப்பவருக்கு கொடுத்து தொலைக்கப்பட்ட காசோலை தொகையை சரி செய்ய வேண்டும்.

4) இதன் மூலம் ஒத்துக் கொள்வது என்னவென்றால், காசோலை கடன் கொடுப்பவரால் வங்கியில் செலுத்தப்படாமல் இருந்தால் அது கடன் கொடுப்பவரின் உரிமையை எந்த விதத்திலும் பாதிக்காது. காசோலையை மாற்றும் போது ஆகும் கால தாமதம், பழுது, தொலைத்து விடுதல் ஆகியவை எந்த விதத்திலும் கடன் கொடுப்பவரை பாதிக்காது. (ஏற்கெனவே கடன் பெறுபவர் கொடுத்திருந்தால் அல்லது வேறு காரணங்கள் இருந்தாலும் வங்கியில் செலுத்தப்பட்ட காசோலை, வங்கியால் காசோலை இகழ்வுக்காக திருப்பி அனுப்ப பட்டால்

5) கடன் கொடுப்பவரின் உரிமைகள் மற்றும் பரிகாரங்களை பாதிக்காத வண்ணம் கடன் பெறுபவர் ஒரு குறிப்பிட்ட தொகையை முதல் அட்டவணையில் சொல்லியபடி செலுத்த வேண்டும். அவ்வாறு இகழ்வு செய்யப்பட்ட காசோலையை மீண்டும் சமர்ப்பிக்கும் போது அதற்காக முதல் அட்டவணையில் சொல்லியபடி மேலும் கட்டணம் வசூலிக்கப்படும். இந்த காசோலை இகழ்வுக்காக வசூலிக்கப்படும் கட்டணம் முதல் அட்டவணையில் விவரிக்கப்பட்டிருக்கும். இவ்வாறாக இகழ்வான காசோலைக்காக வசூலிக்கப்படும் கட்டணம்

எவ்வகையிலும் கடன் கொடுப்பவரை நெகோஷியல் இன்ஸ்ரூமெண்ட் சட்டம் 1881 (அவ்வப்பொழுது திருத்தப்பட்ட சட்டப்படி) பாதிக்காத வண்ணம் செலுத்த வேண்டும்.

6) மேற்சொன்ன கட்டணங்கள் முதல் அட்டவணையில் சொல்லியபடி வசூலிக்கப்பது கடன் கொடுப்பவரின் விருப்பமே இறுதியாகும். முதல் அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள மேற்சொன்ன கட்டணங்களை மாற்றியமைப்பதற்கு கடன் கொடுப்பவருக்கு முழு அதிகாரம் உண்டு. கடன் கொடுப்பவரின் முடிவே இதில் இறுதியானது.

2.11 தவணைத் தொகையை மாற்றுதல் அல்லது மறு அட்டவணை இடுதல்

கடன் கொடுப்பவர் தன் விருப்பப்படி தவணைத் தொகைகளை வேண்டியபடி மாற்றாலாம். அதை கடன் பெறுபவர் செலுத்த வேண்டும். கடன் கொடுப்பவர் அவ்வாறாக செய்யும் மாற்றங்களை கடன் பெறுபவருக்கு தெரிவிக்க வேண்டும்.

2.12 கடன் பெறுபவர் மற்றும் உத்திரவாதம் அளிப்பவரின் பொறுப்புகள்

உத்திரவாதம் அளிப்பவரின் பொறுப்புகள் தனித்தும், சேர்ந்தும் இருக்கும். உத்திரவாதம் அளிப்பவரின் பொறுப்பு என்னவென்றால் அவர் கடனையும் வட்டியையும் சேர்த்து செலுத்த வேண்டும். ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும். கடன் பெறுபவர் ஏற்படுத்தும் மற்ற ஒப்பந்தங்கள் ஆவணங்கள் அவற்றையும் கடன் கொடுப்பவருடன் சேர்த்து பின்பற்ற வேண்டும். கடன் கொடுப்பவருக்கு கடன் வாங்குபவர், உத்திரவாதம் அளிப்பவர் ஆகிய இருவர் மீதும் கூட்டாகவோ அல்லது தனித்தனியாவோ அல்லது ஒருவர் மீது மட்டுமோ கடன் தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்க முடிவு செய்யலாம்.

3.0 பாதுகாப்பு

3.1 கடன் கொடுப்பவர், கடன் பெறுபவருக்கு கடன் கொடுக்க சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்புக் கொண்டு இருப்பதால், கடன் பெறுபவர் சொத்தையும் அதன் உதிரிகளையும் அடமானம் வைக்க ஒப்புக் கொண்டுள்ளார். மேலும் உதிரிகளை மாற்ற பழுது பார்க்க புதுப்பிக்க முதல் அட்டவணையில் சொல்லியபடி இந்த கடனை பெற்று செய்ய கடன் பெறுபவர் ஒப்புக் கொள்கிறார். அதற்காக ஒரு ரத்து செய்ய முடியாத அதிகாரப் பத்திரத்தை கடன் கொடுப்பவர் பெயருக்கு எழுதி கொடுக்க சம்மதிக்கிறார். அது இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் கடன் பெறுபவர் தேவையான ஆவணங்களை அல்லது ஆவணத்தை எழுதிக் கொடுக்கவும், அதாவது இந்த கடனை உறுதிபடுத்தும் வகையில் செய்ய சம்மதிக்கிறார்.

3.2 இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நாளில் அல்லது சொத்தை பெறும் நாளில் எது சீக்கிரமோ அந்த நாளில் அடமானம் துவங்கும்.

3.3 இந்த அடமானம் நிபந்தனை 3.1 -இல் சொல்லியபடி ஏற்படுத்தப்பட்டு அது இந்த கடனுக்காகவும், கடனை திருப்பி செலுத்துவதற்காகவும், பாதுகாப்பிற்காக வைக்கப்படுகிறது.

மேலும், இந்த அடமானம் கடன் பெறுபவர் கொடுக்க வேண்டிய வட்டி அசல் ஆகியவற்றுக்காக பாதுகாப்பு ஏற்படும் வகையில் செய்யப்படுகிறது. அடமானம் செய்யப்பட்ட சொத்து அச்சொத்தின் உதிரி பாகங்கள், மாற்றப்பட்ட பாகங்கள், அதன் மேல் சேர்க்கப்பட்டுள்ள (அல்லது) சேர்க்கப்பட போகின்ற அனைத்தும் அடமானம் செய்யப்பட்டுள்ளது.

3.4 இந்த அடமானம் கடன் கொடுப்பவர் கடனை முழுமையாக பெற்றுக் கொண்டதாக சான்றிதழ் வழங்கும் வரையில் அமுலில் இருக்கும். அது கடன் வாங்குபவர் திவால் ஆகுதல், உடல் நலம் பாதிப்பு, மூளை பாதிப்பு ஆகியவைகளினால் முடியாமல் போனாலோ, வேறு நிறுவனங்களோடு சேர்க்கப்பட்டாலோ, நிர்வாகத்தை வேறு நபர் எடுத்து நடத்தினாலோ, நிறுவனத்தை அரசுடைமை செய்தாலோ இந்த அடமானம் தொடர்ந்து இருக்கும்.

3.5 ஒருவேளை சொத்தின் உடைமையை கடன் பெறுபவர் அடையாவிட்டாலோ அல்லது இந்த ஒப்பந்த நாளில் அவர் பெயருக்கு பதிவு செய்யாவிட்டாலோ அத் தருணத்தில் அதை கடன் பெறுபவர், கடன் கொடுப்பவருக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும். ஒரு வாரத்திற்குள் சொத்து பதிவு செய்யப்பட்டு உடைமை ஒப்படைக்கப்பட்டால் அதன் விவரங்கள் அட்டணையின் ஒரு பகுதியாகும். இந்த ஒப்பந்தம் அமுலுக்கு வரும் நாளில் சொத்தின் விவரம் அல்லது அதன் ஒரு பகுதி கிடைக்காவிட்டாலோ அத் தருணத்தில் இந்த அடமானம் அமுலுக்கு வராது செல்லாது.

3.6 கடன் பெறுபவர் வாகனத்தை அல்லது சொத்தை அதிகாரிகள் நிர்ணயிக்கும் காலத்திற்குள் பதிவு செய்து அதன் பதிவு சான்றிதழின் நகலையும், காப்பீட்டையும் உடனே ஒப்படைக்க வேண்டும்.

3.7 கடன் பெறுபவர் சொத்தின் முழு விவரமும் தனக்கு தெரியும் என்று உறுதி செய்கிறார்.

3.8 கடன் பெறுபவர் அசல் கடன் தொகைக்காகவும் வட்டிக்காகவும் ஒரு பிராமிசரி நோட்டை ஈடுகாட்டுவதற்காக ஏற்படுத்தித் தரவேண்டும்.

3.9 கடன் பெறுபவர் கூடுதல் பாதுகாப்பும், கூடுதல் உத்திரவாதமும் 3-ஆம் நபரிடம் இருந்து கடன் கொடுப்பவர் சொல்லும் படி செய்து தரவேண்டும். இவ்விஷயத்தில் கடன் பெறுபவர் கூடுதல் உத்திரவாதம் ஏற்படுத்து அதற்காக ஒரு ஒப்பந்தம், ஆவணம், அதிகாரப் பத்திரம் ஆகியவைகளை கடன் கொடுப்பவரின் தேவைக்காக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். கடன் பெறுபவர் ஒப்பந்தங்கள், உத்திரவாதங்கள், ஆவணங்களை இந்த கடன் ஒப்பந்தம் முடியும் வரை/முழத் தொகையையும் செலுத்தும் வரையில் ரத்து செய்யக் கூடாது. மேலும் கடன் கொடுப்பவர் முழுத் தொகையும் பெற்றுக் கொண்டதாக சான்றிதழ் வழங்கும் வரையில் எந்த ஆவணங்களையும் ரத்து செய்யக் கூடாது.

4.0 தொகைகளை வரவு வைத்தல்

கடன் கொடுப்பவருக்கு, கடன் பெறுபவா் இந்த ஒப்பந்தத்தின் படி செலுத்தும் தொகைகளை எப்படி வேண்டுமானாலும் வரவு வைத்து கொள்ள உரிமையுண்டு. அவை

1). காப்பீடு தொகை

2). செலவுத் தொகைக் கட்டணங்கள் மற்றும் தொகைகள்

3). வட்டி கட்டணங்கள் செலவுகள் மற்றும் தொகைகள்

4). பணிக்கட்டணங்கள்

5). வட்டி, கூடுதல் வட்டி இந்த கடன் ஒப்பந்தத்தின் நிபந்தனைப்படி செலுத்தும் தொகை

6). இந்த ஒப்பந்தத்தின் படி அசலுக்காக செலுத்தப்படும் தவணைத் தொகைகள்

7). சட்ட நடவடிக்கைகள் எடுக்க ஆகும் செலவுகள்

5.0 கடன் பெறுபவரின் பங்களிப்பு சொத்திற்காக ஆகும் செலவுகள்

கடன் கொடுப்பவா் கடன் தொகையை கொடுப்பதற்கு முன்பு கடன் பெறுபவா் உற்பத்தியாளருக்கு செலுத்திய தொகை குறித்து ரசீதுகள், பிரபோா்மா இன்வாய்ஸ் மற்றும் எல்லாவித ஆவணங்களையும சமா்பிக்கப்பட வேண்டும்.

6.0 பணப்பட்டுவாடா செய்யும் நிபந்தனைகள்

6.1 இந்த கடன் ஒப்பந்தத்தின் கீழ் பணம் கொடுப்பவா், பணம் பட்டுவாடா செய்யப்பட வேண்டிய கடமையானது, கீழே குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் அனுசரிக்கப்பட்ட பின் எழும்.

அ) கடன் பெறுபவா் உத்திரவாதம் ஏற்படுத்தி உத்திரவாதம் அளிப்பவா் மற்றும் பிராமிசரி நோட்டு கொடுத்தல் மற்ற தேவையான ஆவணங்களை சொல்லியபடி கொடுக்க வேண்டும்.

ஆ) கடன் பெறுபவா் எந்தவித தவறும் (டிபால்ட்) இல்லாமல் இருக்க வேண்டும்.

இ) கடன் பெறுபவா் எந்த ஒரு சூழ்நிலையை அவரால் இந்த ஒப்பந்தத்தை முழுமையாக கடைபிடிக்க முடியாத வகையில் ஏற்படுத்தக் கூடாது.

7.0 கடன் பெறுபவரின் கூற்று.

கடன் பெறுபவா் கூறுவதாவது

7.1 கடன் பெறுவருக்கு இந்த ஒப்பநதத்தை எழுதிக் கொடுக்க சட்டப்படி தகுதியுள்ளது. இந்த ஒப்பந்தத்தை எழுதி கொடுக்கவும், நிபந்தனைகளை நிறைவேற்றவும் கடன் பெறுபவரை எந்த வழியிலும் தடுக்கவோ, சட்டத்தின் கீழோ தீா்ப்புகள், தீா்ப்பாணைகள், ஆட்சியில் உள்ள

ஒப்பந்தங்கள் ஆகியவைகளின் கீழோ, தடைசெய்ய படவில்லை. இந்த ஒப்பந்தம் எழுதிக் கொள்வதால், அது சட்டப்படி கடன் பெறுபவரை கட்டுப்படுத்தும் மேலும் அவருக்கு எதிராக இந்த ஒப்பந்தம் செயல்படும். கடன் பெறுபவர் நிறுவனமாக இருந்தால், அவர் இந்த சட்ட முறைப்படி அமைக்கபட்டவர் என்றும் ஒப்பந்தத்தில் ஒரு தரப்பினராக இருப்பதால் அவர் சட்டப்படி இந்த ஒப்பந்தத்தை ஏற்படுத்த சக்தி படைத்தவராக உள்ளார் என்றும் கூறுகிறார்.

7.2 அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தின் மீது வில்லங்கமோ தகராறுகளோ இல்லை.

7.3 கடன் பெறுபவர் தேவையான எல்லா ஆவணங்களையும் இந்த ஒப்பந்தம் தொடர்பாகவும், கடனை அங்கீகரிக்க தேவைப்படுவைகளை ஏற்படுத்தித் தரவேண்டும். கடன் பெறுபவர், தனக்குரிய வரிகள், அரசாங்க நிலுவைகள் அனைத்தையும் செலுத்திவிட்டார். அதற்கான கேட்கும் அறிவிப்பு அல்லது கேட்புகளை பெறவில்லை.

7.4 இந்த சொத்து ஒரு வாகனமாக இருந்தால் இந்த ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கும் வரை அதன் ஓட்டுநர் உரிய உரிமம் வைத்திருக்க கடன் பெறுபவர் உத்திரவாதம் அளிக்க வேண்டும்.

7.5 கடன் பெறுபவருக்கு எதிராக எந்த வழக்கோ, கேட்போ தாக்கல் செய்து அல்லது தாக்கல் செய்யப்படும்படியாக (குற்றவியல் அல்லது உரிமையியல் வழக்குகள்) நிலுவையில் இல்லை.

8.0 கடன் பெறுபவரின் நிபந்தனைகள் / உறுதி மொழிகள்

கடன் பெறுபவர்

1). மொத்த கடன் தொகையையும் தான் எந்த காரணத்திற்காக வாங்கினாரோ அதை முதல் அட்டவணையில் சொல்லியபடி உபயோகப்படுத்த வேண்டும்.

2). இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற கால தாமதம் ஆகும் சூழல் ஏற்பட்டால் அதை உடனடியாக கடன் கொடுப்பவரிடம் தெரிவிக்க வேண்டும்.

3). சொத்திற்காக விதிக்கப்படும் வரிகள், கட்டணங்கள் ஆகியவைகளை சட்டப்படியும், சட்ட திட்டங்கள் படியும் ஒழுங்காக செலுத்தியிருக்க வேண்டும். சொத்தை பயன்படுத்துதல் இயக்குதல் பராமரித்தலின் போது ஆகும் செலவுகளுக்கு கடன் பெறுபவரே பொருப்பாளர் ஆவர்.

4). கடன் கொடுப்பவர் அங்கீகரிக்கும் காப்பீட்டு கழகத்திடம் சொத்தை காப்பீடு செய்ததாக உத்திரவாதம் அளிக்க வேண்டும். அதில் எல்லா ஆபத்துகளும் துன்பங்களும் அதாவது கலகங்கள், புயல், வெள்ளம் ஆகியவைகளால் ஏற்படும் நஷ்டங்கள், 3-ஆம் மனிதர் செலவுகள், இந்தக் கடனையும், செக்குரிட்டியையும் பாதுகாப்பதாக கடன் கொடுப்பதற்கு உத்திரவாதம் அளிக்க வேண்டும்.

5) இயற்கை மற்றும் வேறுவித காரணங்களினால் அதாவது நிலநடுக்கம், வெள்ளம், புயல், திருட்டு சொத்திற்கு நஷ்டம் அல்லது பழுது ஏற்பட்டால் உடனே அதை காப்பீட்டு

நிறுவனங்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும். கடன் கொடுப்பவருக்கும் இதை தெரியப்படுத்த வேண்டும்.

6) இந்த ஒப்பந்தம் மற்றும் சொத்து தொடர்பாக எல்லா அங்கீகாரங்கள், அனுமதிகள், உரிமங்கள் ஆகியவைகளை செயல்முறையில் வைக்க சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

7) சொத்தை விற்க, குத்தகைக்கு விட, பெயர் மாற்றம் செய்ய அடமானம் வைக்க, வில்லங்கம் செய்ய எந்த வகையிலும் கடன் கொடுப்பவரின் அனுமதியில்லாமல் நடக்கக் கூடாது. நேரிடையாகவோ, மறைமுகமாகவோ, சொத்தை நம்பிக்கை மோசடி மற்றும் மோசடி செய்து மாற்றம் செய்தால் அது குற்றமாகும், நடவடிக்கைக்கு ஏதுவாகும். அவ்வாறு ஏமாற்றி குற்றமிழைத்தால் கடன் கொடுப்பவர், புகார் கொடுக்கவும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வைத்து குற்றவியல் விசாரணை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

8) இந்த ஒப்பந்த காலம் / கடன் காலம் முடியும் வரை சொத்தை நன்கு பராமரித்து பழுது பார்த்து அபிவிருத்தி செய்து அதை நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும்.

9) தவணைத் தொகைக்காக பின் தேதியிட்ட காசோலை வழங்குவதற்காக தனது வங்கிக் கணக்கில் போதிய தொகையை பராமரித்து வரவேண்டும்.

எனவே எல்லா பின் தேதியிட்ட காசோலைகளும் பணமாகும்படி வைத்திருக்க வேண்டும்.

10) தொடர்ந்து இந்திய அரசாங்கத்திற்கு அல்லது மாநில அரசுக்கு செலுத்த வேண்டிய வருமானம் வரி மற்ற வரிகளை செலுத்தி எந்தவித வரிகளோ, கட்டணங்களோ நிலுவை இல்லை என்று உத்திரவாதம் அளிக்க வேண்டும்.

11) இந்த சொத்து ஒரு புது வாகனமாக இருந்தால் அதை மோட்டார் வாகன சட்டம் 1988 படி உரிய பதிவு அலுவலர் முன்பாக பதிவு செய்து, அந்த வாகனத்தை அடமானம் வைத்ததை அதை பதிவு சான்றிதழில் குறிப்பிட்டு வைக்க வேண்டும். இந்த அடமான சொத்து உபயோகிக்கப்பட்ட வாகனம் என்றால் அதன் பதிவு சான்றிதழில் உரிய பதிவுகளை செய்து வாகனம் அடமானம் வைக்கப்பட்டதை கடன் கொடுப்பவர் பெயருக்கு செய்து தரவேண்டும்.

12) சொத்து ஒரு வாகனமாக இருந்தால் அதன் பதிவு சான்றிதழின் நகலை கடன் கொடுப்பவரிடம் கொடுக்க வேண்டும்.

13) இந்த வாகனத்திற்காக டூப்ளிகேட் பதிவு சான்றிதழைப் பெற கடன் கொடுப்பவரின் அனுமதியின்றி மனு கொடுக்கக் கூடாது.

14) சொத்து குறித்து ஏற்படும் பழுதுகள் திருட்டு, காப்பீடு கேட்புகள் அல்லது தொலைத்தல், பதிவு சான்றிதழ் புத்தகத்தை தொலைத்தல், காப்பீட்டு நகல்களை தொலைத்தல் ஆகியவைகளை அவ்வாறு பழுது, திருட்டு, காப்பீடு கேட்புகள் அல்லது தொலைத்தல், பதிவு

சான்றிதழ் புத்தகத்தை தொலைத்தல் இவைகள் நடத்த 3 நாட்களுக்குள் கடன் கொடுத்தவருக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும். அச்சூழலில் இரு தரப்பினரின் நலனை கருத்தில் கொண்டு, கடன் கொடுப்பவரின் உரிமைகளுக்கு பாதகம் ஏற்படாத வகையில் கடன் பெற்றவர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

15) கட்டணங்கள், வரிகள், மற்ற கட்டணங்கள் தற்பொழுதோ அல்லது பிற்காலத்திலோ அரசாங்கம், நகராட்சி, மாநகராட்சி, மண்டல போக்குவரத்து அதிகாரி ஆகியவர்கள் கேட்டு செலுத்தப்பட வேண்டியிருந்தால் கடன் கொடுப்பவர் கேட்கும் போது அதை செலுத்தியதற்கான ரசீதுகளை அவரிடம் கொடுக்க வேண்டும்.

16) கடன் கொடுப்பவரின் எழுத்து மூல அனுமதியில்லாமல், அடமானம் வைக்கப்பட்ட வாகனத்தையோ அதன் பகுதியையோ பறிமுதல் போன்ற செயல்களுக்கு உட்படுத்தக் கூடாது. மேலும், கடனின் பாதுகாப்பிற்கு குறைவு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நேரிடையாகவோ, மறைமுகமாகவோ சொத்தை மாற்றம் செய்தால் அது குற்றவியல் நடவடிக்கைக்கு ஏதுவாகும். அதாவது ஏமாற்றுதல், கடன் கொடுப்பவரை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வைத்தல், கடன் பெறுபவருக்கு எதிராக குற்றவியல் புகார்கள் செய்ய ஏதுவாகும்.

17) இந்த கடன் பெறும் பிணையத்தை மேலும் உறுதி செய்யும் வகையில் கடன் கொடுப்பவருக்கு தேவைப்படும் பத்திரங்கள், உத்திரவாதங்கள் போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மேலும் உரிமைகள், அதிகாரங்கள், நிவாரணங்கள் ஆகியவைகளுக்காவும் தேவைப்படும் ஆவணங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

18) செலவுகள், கேட்புகள், நடவடிக்கைகள், நஷ்டங்கள் ஆகியவைகள் கடன் கொடுப்பவருக்கு ஏற்படாவண்ணம் பாதுகாக்க வேண்டும் (விபத்து, பழுது போன்றவைகள் ஏற்பட்டால் அதற்காக 3-ஆம் மனிதர் செலவுகளையும் கொடுக்க வேண்டும்). இவ்வாறான சட்ட செலவுகள், கட்டணங்கள், சொத்தை விற்க, உடைமையப் பெற, காப்பீடு செய்ய ஆகும் செலவுகள் கடன் கொடுப்பவருக்கு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும், இந்த கடனுக்காக, கடன் கொடுப்பவர் மாற்றத்தக்க ஆவணங்கள் சட்டம் மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டம் ஆகியவைகள் மேற்கொள்ள ஆகும் செலவுகளை கொடுக்க வேண்டும்.

19) கடன் கொடுப்பவர் அவ்வப்பொழு ஏற்படுத்தும் எல்லா நிபந்தனைகளையும், தெரிந்து கொண்டமையை உத்திரவாதம் அளிக்க வேண்டும்.

20) சொத்தின் மீது எந்தவிதமான வில்லங்கமோ, தகராரோ ஏற்படுத்தக் கூடாது.

9.0 சொத்தின் விலை அதிகரிப்பு

9.1 சொத்து புதிய வாகனமாக இருந்தால் அதன் விலை ஒப்பந்தம் கையெப்பம் இடப்பட்ட பிறகு அதிகரிக்கும் தருணங்களில் கடன் பெறுபவர் அதிக பணம் கொடுத்து அந்த வாகனத்தை வாங்க வேண்டியிருக்கும். அந்த மாறுதல் தொகைக்காக கடன் கொடுப்பவர் எந்தத் தொகையும் கடனாக கொடுக்க மாட்டார். இவ்விஷயத்தில் கடன் கொடுப்பவர் சில சமயம் இந்த கடன் ஒப்பந்தத்தை ரத்து செய்ய உரிமையுண்டு. அவ்வாறு ரத்து செய்தால் உற்பத்தியாளருக்கு கொடுத்த தொகையை திரும்ப வசூலிக்க நேரிடும். (பதிவுக் கட்டணம், வட்டி முதலியவைகளை கடன் பெறுபவர் கொடுக்க கடமைபட்டவர்).

10.0 ஒப்படைத்தல்

10.1 சொத்தை உற்பத்தியாளர் / விற்பனையாளர்களிடமிருந்து பெறுவதில் கடன் பெறுபவரே பொறுப்பாளர் ஆவார். வாகனம் நல்ல நிலையில் உள்ளதா, தரமானதா என்பதை ஆராய்ந்து வாங்கவேண்டும். அவ்வாறு வாகனத்தை பெற்றவுடன் இவ்விஷயத்தை உடனே கடன் கொடுப்பவருக்குத் தெரிவிக்க வேண்டும்.

10.2 கடன் பெறுபவர் இதன் மூலம் ஒப்புக் கொள்வது என்னவென்றால், உற்பத்தியாளர் / விற்பனையாளர் தாமதமாக வாகனத்தை கொடுத்தால், வாகனத்தின் தரம், நிலை ஆகியவற்றிற்கு கடன் கொடுப்பவர் எவ்விதத்திலும் பொறுப்பாளர் ஆகமாட்டார். கடன் பெறுபவர், கடன் கொடுப்பவரை எந்த பொறுப்பிற்கும் ஆளாக்க மாட்டார். மேலும் குறிப்பிட்ட தவணை தொகைகள் செலுத்துவதை நிறுத்த மாட்டார். (சொத்து உடைமை ஒப்படைப்பதில் கால தாமதம் ஆனால் அல்லது வேறு காரணங்களுக்காக).

11.0 உபயோகம்

கடன் பெறுபவர் இதன் மூலம் உத்திரவாதம் அளிப்பது என்னவென்றால், அவரோ அவரது வேலையாட்களோ வாகனத்தை நிபந்தனைகளில் அனுமதியளிக்கப்படாத உபயோகத்திற்கு பயன் படுத்த மாட்டோம். மேலும் காபிபீட்டில் கண்ட நிபந்தனைகளை மீறியும் காபிபீட்டை செல்லத்தகாத வகையில் மாநில மத்திய வனத்துறை, சுங்கத்துறை, வணிகவரி போதைப்பொருள், இருப்புப் பாதை, சட்டத்திற்கு புறம்பாக பொருட்களை வைத்திருத்தல், தங்க கட்டுப்பாடு போன்ற சட்ட திட்டங்களுக்கு அடிபணியாமல் எந்த வித பொருட்களையும் ஏற்றி செல்ல வாகனத்தை உபயோகப்படுத்த மாட்டோம் என்கிறன்றனர். மேலும் அவ்வாறு சட்டத்திற்கு புறம்பாக எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபடமாட்டோம் என்று உறுதியளிக்கிறார். கடன் கொடுப்பவருக்கு நஷ்டம் ஏற்படும் வகையில் நடக்க மாட்டோம் என்றும், கடன் கொடுப்பவருக்கு சொல்லியிருந்த உபயோகத்தைத் தவிர வேறு வகையில் உபயோகப்படுத்த மாட்டோம் என்றும், அவ்வாறு ஏற்படும் நஷ்டங்களுக்கு தன் சொந்த செலவில் சரி செய்வதாகவும் கூறுகிறார்.

12.0 காப்பீடு மற்றும் பராமரிப்பு

12.1 இந்த கடனுக்காக அளிக்கப்பட்ட பாதுகாப்பை காப்பதற்காக கடன் கொடுப்பவரிடம் அடமானம் வைக்கப்பட்டதை காப்பீடு மனுவில் குறியிடப்பட்டிருக்கும். இந்த ஒப்பந்தத்தில் கையெப்பம் இட்டவுடன் கடன் பெறுபவர் சொத்திற்கு நட்டம் ஏற்படாதவகையில் காப்பீடு செய்து வைப்பதாகவும் (வேலை நிறுத்தம், கலவரம், உள்நாட்டு போர், வெள்ளம்) போன்ற நட்டங்கள் ஏற்படாதவகையிலும் 3-ஆம் மனிதர் ஆபத்துகளில் இருந்து காப்பாற்றவும், கடன் கொடுப்பவர் அங்கீகரிக்கவும், காப்பீடு செய்யவும், அதற்காக சரிவர காப்பீட்டு தொகையை செலுத்தவும், (இந்த ஒப்பந்த காலம் முடியும் வரை) கடன் கொடுப்பவர் கேட்கும் போது அந்த ரசீதுகள் பணம் செலுத்திய நமுனாக்கள் ஆகியவற்றை காண்பிக்கவும் ஒப்புக் கொள்கிறார். இந்த காப்பீட்டை கடன் பெறுபவர் பெயரில் செய்து அந்த நமூனாவில் கடன் கொடுப்பவர் பெயரை குறிப்பிட வேண்டும். மேலும் கடன் கொடுப்பவர் வங்கியின் பெயரையும் கூடுதலாக குறிப்பிட வேண்டும்.

12.2 காப்பீடு பாலிசியில் சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகளில் கண்ட உபயோகத்தைத் தவிர வேறு உபயோகத்திற்கு சொத்தை உபயோகிக்கக் கூடாது. மேலும் அவ்வாறு தவறாக உபயோகிப்பதால் காப்பீடு செல்லத் தகாது என்ற நிலையை ஏற்படுத்தக் கூடாது.

12.3 கடன் கொடுப்பவர் தன் சொந்த விருப்பத்தின் பேரில் இந்த காப்பீடை கடன் பெறுபவர் பெயரில் எடுத்து அதற்குண்டான தொகையை கடன் பெறுபவர் செலுத்தும் பின் தேதியிட்ட காசோலை மற்றும் அவர் சொல்லும் உத்திரவின் பேரில் செலுத்தலாம். இருப்பினும் அவ்வாறு செலுத்தப்படாத தொகைகளுக்கு கடன் கொடுப்பவர் எந்த வகையிலும் பொருப்பாளர் ஆகமாட்டார். மேலும் காப்பீட்டு தொகையை சரியாக செலுத்தி காப்பீட்டை சரியான முறையில் வைத்திருக்க கடன் பெறுபவர் கடமைபட்டவர்.

12.4 காப்பீட்டு தொகை கடன் கொடுப்பவர் தான் பெறவேண்டும். காப்பீட்டுத் தொகையை பெறுவதற்கு கடன் கொடுப்பவரை அனுமதித்து அவருடைய அக்கறையை பாதுகாத்துக் கொள்ள கடன் பெறுபவர் அனைத்து செயல்களும் செய்ய வேண்டும். கடன் பெறுபவர் கடன் கொடுப்பவர் இடும் எல்லா கட்டளைகளுக்கும் அடிபணிந்து நடநடது காப்பீட்டை அவ்வப்போது புதுப்பித்து வைக்க வேண்டும்.

12.5 கடன் பெறுபவர் வாகனத்தை அவ்வப்பொழுது நல்ல முறையில் பழுது பார்த்து வைக்க வேண்டும். விபத்துக்கள் ஏற்பட்டு அதனால் ஆகும் செலவுகளுக்கு உண்டான ரசீதுகளை காப்பீடு கழகத்தில் செலுத்தி வைக்க வேண்டும். கடன் பெறுபவருக்கு நிலுவைத் தொகை இல்லாமலிருந்தால் காப்பீட்டு கழகத்திலிருந்து பெறப்பட்ட பணத்தினை அதை அவரே செலுத்தி அதன் பலனை கடன் கொடுப்பவர் அடைய வேண்டும்.

13.0 தவறுகள்

கீழே கண்டவை தவறுகள் என்று சொல்லப்படும்

13.1 கடன் பெறுபவர் கடன் தொகை, கட்டணங்கள் போன்றவற்றை செலுத்த தவறினால் அல்லது ஏதாவது ஒரு தவணையை செலுத்தாமல் விட்டால் அல்லது குறிப்பிட்ட நாளுக்குள் செலுத்தாமல் பாக்கி வைத்தால்.

13.2 கடன் பெறுபவர் (தனிமனிதராகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவராகவோ இருந்தால் அவர்களில் ஒருவர்) இறந்தாலோ அல்லது கடனாளி (திவால் ஆனவர்) என்று அறிவித்து சொத்திற்காக ஒரு அறங்காவலரை அல்லது ரிசீவரை அமர்த்தினால்

13.3 கடன் பெறுபவர் (கழகமாகவோ அல்லது கூட்டு நிறுவனமாகவோ இருத்தல்) அவர்களுக்கு எதிராக 3-ஆம் நபர் சட்டப்படியான நடவடிக்கை எடுத்திருந்தால் அந்த கடன் பெறுபவர் நிறுவனம் கலைக்கப்பட்டிருந்தால் அல்லது ஒரு அறங்காவலரை அல்லது ரிசீவரை அமர்த்தியிருந்தால் குறிப்பாக அடமானம் வைக்கப்பட்ட சொத்திற்காக

13.4 கடன் கொடுப்பவரின் எழுத்து மூல அனுமதியில்லாமல் கடன் பெறுபவர் சொத்தை விற்றால், வில்லங்கம் செய்தால், சொத்து மாற்றம் செய்தால் அல்லது சொத்தை விற்க, சொத்து மாற்றம், வில்லங்கம் செய்ய சொன்னால் அல்லது

13.5 இந்த ஒப்பந்தத்தின் படி கடன் பெறுபவர் காப்பீடு தொகை செலுத்தாமலோ அல்லது வங்கிக் கட்டணங்கள் (செல்லாத காசோலைகளுக்காக) செலுத்தாமலோ

13.6 அடமானம் வைக்கப்பட்ட சொத்தை அரசு கையகப்படுத்துதல் அல்லது வேறு ஜப்தி நடவடிக்கைகள் சொத்தை பொறுத்து எடுத்திருந்தால்

13.7 அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் மீது விதிக்கப்படும் வரி கிஸ்தி, அபராதங்கள் ஆகியவைகளை அவ்வப்பொழுது கடன் பெறுபவர் செலுத்தாமலிருந்தால்

13.8 அடமானம் வைக்கப்பட்ட சொத்து திருடு போய் இருந்தால் அல்லது அதை கண்டு பிடிக்க முடியாத காரணங்களுக்காக.

13.9 சொத்திற்கு பழுது ஏற்பட்டு உபயோகப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டால் அல்லது இந்த சொத்தினால் 3-ஆம் மனிதருக்கு ஏதாவது காயங்கள் ஏற்பட்டிருந்தால்

13.10 இந்த ஒப்பந்தத்தின் படி கடன் பெறுபவர் கடன் கொடுப்பவருக்கு பின் தேதியிட்ட காசோலையை கொடுத்திருந்தால், கொடுக்க வேண்டும் என்றால், ஏதோ ஒரு காரணத்தால் காசோலையை சமர்ப்பித்து இருந்தும் பணமாக்க முடியாமல் இருந்தால்

13.11 நிபந்தனை 2.10-இல் கூறியபடி கடன் பெறுபவர் காசோலைக்கு உண்டான பணத்தை கொடுக்க வேண்டாம் என்று வங்கிக்கு சொல்லியிருந்தால்

13.12 இந்த சொத்து வாகனமாக இருந்து அதன் சான்றிடப்பட்ட பதிவு சான்றிதழை கொடுக்கத் தவறினால்

13.13 இந்த ஒப்பந்தத்தின் படி ஏதோ ஒரு சூழ்நிலை காரணமாக சொத்திற்கு தீங்கு அல்லது அபாயம் ஏற்படும் கடன் கொடுப்பவர் கருதினால்

13.14 இந்த ஒப்பந்தத்தில் கண்ட படி கடன் பெறுபவர் தனது சொத்தின் விவரங்களை (புதிய அல்லது பழைய சொத்துக்கள்) சமர்ப்பிக்காமை

13.15 கடன் பெறுபவர் இங்கு கண்ட நிபந்தனைகளை கடைபிக்காமல் இருத்தல், மேலும் தேவையான தகவல்களை அளிக்காமல் இருத்தல் அல்லது கடன் பெறுபவரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் தவறாக இருந்தது என்று தெரிந்தால்

13.16 கடன் பெறுபவர் திவால் ஆனவர் என்று விளம்புகை செய்யப்பட்டிருந்தால் (அவர் ஒரு நிறுவனமாக இருந்து அது திவாலாகி கணகெடுப்பில் இருந்தால்

13.17 கடன் கொடுப்பவரின் உரிமையை பாதிக்கும் சூழல் ஏற்படும் என்று கடன் கொடுப்பவர் கருதினால்

13.18 வேறு எந்த ஒப்பந்தத்தில் கடன் பெறுபவர் கடனை அடைக்காமல் தவறு செய்திருந்தால் (கடன் பெறுபவருக்கும், கடன் கொடுப்பவருக்கும் இடையே

14.0 கடன் கொடுப்பவரின் உரிமைகள்

14.1 கடன் பெறுபவர் செலுத்தப்பட வேண்டிய மொத்தத் தொகைகள், கட்டணங்கள், வட்டிகள், காப்பீட்டுத் தொகை மற்றும் இதர வரிகள் கடன் பெறுபவர் செலுத்தப்படாமல் இருந்தால், அவ்போது கடன் கொடுப்பவர் அவ்வாறு செலுத்தப்படாத தொகைக்காக முதல் அட்டவணையில் சொல்லியபடி கூடுதல் சதவிகித வட்டியை வசூலிக்க உரிமையுண்டு. உடனே கடன் கொடுப்பவர் கடன் பெறுபவருக்கு அறிவிப்பு அனுப்பி தனது தவறை குறிப்பிட்ட நாட்களுக்குள் திருத்திக் கொள்ளும் படி எச்சரிக்கலாம்.

14.2 தவறு செய்யும் பட்சத்தில் கடன் பெறுபவர் வாகனத்தை கடன் கொடுப்பவரிடம் அது துவக்கத்தில் இருந்த நிலையிலேயே ஒப்படைக்க வேண்டும். கடன் பெறுபவர் அவ்வாறு வாகனத்தின் உடைமையை கடன் கொடுப்பவர் பெறும் போது எந்த ஆட்சேபணையும் செய்யக் கூடாது. மேலும் கடன் பெறுபவர் வாகனம் வைக்கப்பட்டிருக்கும் கிடங்கு, பணிமனை ஆகியவற்றில் கடன் கொடுப்பவரின் பிரதிநிதிகள் வேலையாட்கள் எந்த வித முன் அறிவிப்பும் இன்றி பிரவேசித்து அல்லது அந்த இடத்தின் கதவு பூட்டப்பட்டிருந்தால் உள்ளே செல்ல உரிமையுண்டு. மேலும் கடன் கொடுப்பவர் அந்த கிடங்கில் இருந்து வாகனத்தை தூக்கிச் செல்லவும் உரிமையுண்டு. கடன் கொடுப்பவர் அவ்வாறு வட்டியை தூக்கிச் செல்லும் செலவுகள் மற்ற கட்டணங்களையும் செலுத்த வேண்டும். கடன் கொடுத்தவர் அவ்வாறு வாகனத்தை எடுத்து சென்ற பிறகு வாகனத்திற்கு ஏற்படும் பழுதுகள், திருட்டு, தீ, மழை, வெள்ளம், நிலநடுக்கம்,

விபத்துக்கள் ஆகியவற்றால் ஏற்படும் நஷ்டத்திற்கு கடன் கொடுப்பவர் பொறுப்பாளர் ஆக மாட்டார்.

14.3 மேற்சொன்னவாறு தவறுகள் ஏற்பட்டால் கடன் பெறுபவர், கடன் கொடுப்பவருக்கு வாகனத்தை விற்க உரிமை மாற்றம் செய்ய (பொது ஏலத்தில் அல்லது தனி நபர் விற்பனை போன்ற வழிகளில்) வாகனத்தை விற்று அதில் வரும் பணத்தை கடன் பெறுபவர் கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகையை இந்த ஒப்பந்தத்தில் கண்டவாறு சரி செய்து கொள்ளலாம். ஒரு வேளை அவ்வாறு விற்று கிடைக்கப்பட்ட பணம் கடன் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகைக்கு போதுமானதாக இல்லை என்றால் அதை கடன் பெறுபவர் சரி செய்ய வேண்டும். மேலும், அந்த விற்பனைத் தொகை நிலுவைத் தொகையை விட அதிகமாக இருந்தால் கடன் கொடுப்பவர் அத்தொகையை கடன் பெறுபவருக்கு திருப்பிக் கொடுத்து விடுவார். இங்கு சொல்லப்படா விட்டாலும் அவ்வாறு கடன் கொடுப்பவர் வாகனத்தை விற்பதற்கு ஏதும் தடை ஏற்பட்டால் அத்தருணத்தில் தனது பாதுகாப்பை உறுதி செய்ய கடன் கொடுப்பவர் தக்க நடவடிக்கை எடுப்பார்.

14.4 கடன் கொடுப்பவர் அவ்வாறு வாகனத்தை விற்க கடன் பெறுபவர் ஆட்சேபணை எழுப்பக் கூடாது. அவ்வாறு நடவடிக்கை எடுக்கும் போது ஏற்படும் நஷ்டங்களுக்கு கடன் கொடுப்பவர் பொறுப்பாளர் ஆக மாட்டார். மேலும் தரகர் மற்றும் ஏலம் இடுபவர்கள், கடன் கொடுப்பவரால் அமர்த்தப்பட்டவர்கள் மூலம் ஏற்படும் நஷ்டத்திற்கும் கடன் கொடுப்பவர் பொறுப்பாளர் ஆக மாட்டார்.

14.5 செலவுகள் அதாவது சட்ட நடவடிக்கைகள் எடுக்கும் போது ஏற்படும் செலவுகள் சொத்தை கண்டு பிடிக்கும் செலவுகள் உடமை எடுக்கும் செலவுகள், பணிமனை, காப்பீடு, போக்குவரத்து, சொத்தை விற்க ஆகும் செலவுகள் மேலும் கடன் கொடுப்பவர் சார்பாக ஏற்படுத்தப்படும் சட்ட செலவுகள், மேலும் இந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை செயலாக்குவதற்கான செலவுகளை, கடன் பெறுபவர் கொடுக்க வேண்டும். இதில் கூறப்பட்டுள்ள பரிகாரங்கள், இதர பரிகாரங்களுக்கு தடையாக இருக்காது.

14.6 இந்த ஒப்பந்தத்தில் கண்டுள்ள நிபந்தனைகள் தவிர கடன் கொடுப்பவர் எப்பொழுது வேண்டுமானாலும் வாகனத்தை திருப்பி எடுக்க முழுத் தொகையை செலுத்தும்படி நிர்பந்தப்படுத்தலாம். மேலும் கடன் பெறுபவர் முழு பாக்கித் தொகையும் செலுத்தும் பட்சத்தில் சொத்தை கடன் பெறுபவர் பெயருக்கு மாற்றலாம்.

14.7 கடன் கொடுப்பவர் கடனை திருப்பிக் கொடுக்க நிர்பந்தம் செய்தால் (கடன் பெறுபவர் தவறு செய்யும் பட்சத்தில்) கடன் பெறுபவர் உடனே சொத்தின் உடைமையை கடன் கொடுப்பவரிடமோ அல்லது அவரின் முகவரிடமோ அல்லது அவரால் அமர்ப்பட்டவரிடமோ கொடுக்க வேண்டும். எல்லா பதிவுகள், சான்றிதழ்கள், காப்பீடுகள், அடமான சொத்துக்கு தொடர்புடையவைகளை கடன் கொடுப்பவர் பெயருக்கு மாற்றம் செய்ய வேண்டும்.

14.8 சொத்து கடன் கொடுப்பவரின் உடமையில் இருக்கும் போது ஏற்படும் நட்டங்கள், பழுதுகள், கால வரம்பு, தேய்மானங்கள் முதலியவை அடமான சொத்திற்கு ஏற்பட்டால் அதற்கு கடன் கொடுப்பவர், அவரால் அமர்த்தப்பட்டவர், முகவர்கள் பொறுப்பாளர் ஆக மாட்டார்கள்.

14.9 கடன் கொடுப்பவர், கடன் பெற்றவரிடமிருந்து சொத்தை தேடுவதற்கான ஆகும் செலவினையும், கைப்பற்றுவதற்கான செலவினையும், வண்டியை நிறுத்தி வைப்பதற்கான செலவினையும், காப்பீட்டு செலவினையும், இடமாற்றுவதற்கான செலவினையும், விற்பனை செய்வதற்கான செலவினையும் மற்றும் இதர சட்ட வழக்குகளுக்கான செலவினையும் பெறுவதற்கு உரிமை பெற்றவராகிறார்.

14.10 சொத்து கடன் கொடுப்பவரின் உடமையில் இருக்கும் போது ஏற்படும் எல்லா நட்டங்களுக்கும் கடன் கொடுப்பவர் அவருடைய முகவர் அல்லது அவரால் அமர்த்தப்பட்டவர்கள் பொறுப்பாளர் ஆக மாட்டார்கள். கடன் பெறுபவர், கடன் கொடுப்பவரின் அவருடைய முகவர் அல்லது அவரால் அமர்த்தப்பட்டவர்களை எந்த வித நட்டம் இழப்பு போன்றவைகளுக்கும் அடமானம் வைக்கப்பட்ட சொத்து கிடங்கில் இருக்கும் போது ஏற்படும் நட்டங்களுக்கும், உடைமையை எடுக்கும் போது அல்லது சொத்தை கைப்பற்றும் போது ஆகும் செலவுகளுக்கும் அவர்களை பொறுப்பாளர் ஆக்க மாட்டேன் என்று உறுதி கூறுகிறார்.

15.0 உத்திரவாதம் அளித்தல்

கடன் கொடுப்பவர் கோரினால், கடன் பெறுபவர் கூடுதல் மற்றும் மூன்றாம் நபர் உத்திரவாதம் கடன் கொடுப்பவருக்கு அளிக்க வேண்டும்.

16.0 திருப்பி செலுத்துதல்

2-வது அட்டவணையில் சொல்லியபடி கடன் கொடுப்பவர் கடனை உரிய காலத்திற்கு முன்பாகவே அடைக்க நினைத்தால் முதல் அட்டவணையில் கூறிய படி ஒப்பந்த காலத்திற்கு முன்பாகவே கடனை அடைக்கும் கட்டணத்தை கடன் பெறுபவர் செலுத்த வேண்டும். கடன் தொகையை விட அதிகமான தொகை அவ்வாறு குறிப்பிட்ட காலத்திற்கு முன்பு கடனை அடைக்கும் போது பாக்கியிருந்தால் அதனை கடன் பெறுபவர் செலுத்த வேண்டும். இந்த திருப்பி செலுத்தும் முறை கடனை பணமாகவோ, காசோலையாகவோ கொடுத்து பைசல் செய்யும் போது ஒப்புக் கொள்ளப்படும்.

17.0 மறு கடன்

கடன் பெறுபவர் மற்றும் உத்திரவாதம் அளிப்பவர் சொத்தை விற்க அல்லது உரிமை மாற்றம் செய்ய முழு அதிகாரத்தையும் கடன் கொடுப்பவருக்கு அளிக்க வேண்டும். அதை கடன் கொடுப்பவர் முடிவு செய்வார். சொத்தை வாங்குபவர் உரிமை மாற்றம் பெறுபவருக்கு பதிலாக கடன் பெறுபவரை எதிர்த்து தனது உரிமையை கடன் கொடுப்பவர் தக்க வைத்துக் கொள்வார்.

மேலும் சொத்தை வேறு மனிதருக்கு விற்கும் போதும் அதை கடன் பெறுபவர் மற்றும் உத்திரவாதம் அளிப்பவருக்கு அதனை தெரியப்படுத்துவார். மேலும் இந்த அதிகாரத்தை கடன் கொடுப்பவர் தொடர்ந்து 3-ஆம் பார்டிக்காக வைத்துக் கொள்வார். மேலும் கடன் கொடுப்பவர் உத்தரவின் பேரில் நிலுவைத் தொகைகளை 3-ஆம் நபர்கள் செலுத்துவர். கடன் பெறுபவரும் உத்திரவாதம் அளிப்பவரும் இவ்வாறாக 3-ஆம் மனிதர்களுக்கு இந்த கடன் தொகையில் ஏற்படும் வித்தியாசத் தொகையைக் கொடுப்பர். 3-ஆம் மனிதரும் கடன் கொடுப்பவரின் சம்மதத்தின் பேரில் அத் தொகைகளை பெற்றுக் கொள்வர்.

18.0 முகவர்களை அமர்த்துவதில் கடன் கொடுப்பவரின் உரிமை

கடன் பெறுபவர், கடன் கொடுப்பவருக்காக 1 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களை எல்லா நடவடிக்கைகள் செய்வதற்காக கடன் கொடுப்பவரின் விருப்பத்திற்கேற்ப தங்கள் முகவர்களாக, பாக்கி பணங்களை வசூலிக்க அமர்த்துவர். மேலும் இந்த நபர்கள் தவணைத் தொகை, வட்டி மற்ற கட்டணங்களை கடன் கொடுப்பவருக்காக இந்த ஒப்பந்தத்தின் கீழ் எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து அதற்கான அறிவிப்புகளை கடன் பெறுபவரின் இல்லம் அல்லது அலுவலகத்திற்கு அனுப்புவர்.

19.0 நிவர்த்தி செய்தல் மற்றும் சார்ஜ்.

இவ்வொப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகள் அனைத்தும் கடன் பெற்றவரையும் மற்றும் உத்திரவாதம் அளித்தவரையும் கட்டுப்படுத்தும்.

19.1 ஒப்பந்தத்தில் சொன்னவைகளைத் தவிர கடன் கொடுப்பவருக்கு, கடன் பெறுபவர் / உத்திரவாதம் அளிப்பவருடைய சொத்துக்கள் கடன் கொடுப்பவர் கட்டுப்பாட்டில் இருக்கும். மேலும் அந்த சொத்தின் மேலான உரிமைகளும் கடன் கொடுப்பவரின் கட்டுப்பாட்டில் இருக்கும். மேலும் கடன் கொடுப்வரின் / உத்திரவாதம் அளிப்பவர் ஆகியோர் கொடுக்க வேண்டிய தொகைகளும் கடன் கொடுப்பவருக்கு சொந்தமானது.

19.2 கடன் பெறுபவர் இதன் மூலம் ஒப்புக் கொள்வது என்னவென்றால், மாதாந்திர தவணைத் தொகை / கட்டணங்கள் ஆகியவைகளை செலுத்துவதில் கடன் பெறுபவர் தவறு செய்திருந்தால் இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்வதோடு அல்லாமல் கடன் கொடுப்பவருக்கு கடன் பெறுபவர் /உத்திரவாதம் அளிப்பவர் கணக்குகளில் உள்ள பணத்தை சரி செய்வதற்கு உரிமையுண்டு.

20.0 அறிவிப்புகள்

20.1 கடன் கொடுப்பவரின் அலுவலர் கையெப்பம் இட்டு பாக்கித் தொகை உள்ளது என்று அனுப்பிய சான்றிதழ் கடன் பெறுவர் / உத்திரவாதம்

20.2 கடன் பெறுவர் / உத்திரவாதம் அளிப்பவர் தங்கள் விலாசத்தை மாற்றி இருந்தால் அதனை ஒரு வாரத்திற்குள் கடன் கொடுப்பவருக்குத் தெரிவிக்க வேண்டும். கடிதங்கள், ஆவணங்கள் ஆகியவைகளை இந்த ஒப்பந்தத்தில் சொன்ன விலாசத்திற்கோ அல்லது மேற்சொன்னபடி தெரிவிக்கப்பட்ட விலாசத்திற்கோ கடன் கொடுப்பவர் அனுப்பி வைப்பார் அவ்வாறு அனுப்பப்பட்டால், அது 48 மணி நேரத்திற்குள் கடன் பெறுபவர் மற்றும் உத்திரவாதம் அளிப்பவர்களால் பெறபட்டதாக கருதப்பட வேண்டும்.

20.3 எல்லா கடிதப் போக்கு வரத்துகளிலும் கடன் பெறுபவர்ள / உத்திரவாதம் அளிப்பவர் தங்கள் ஒப்பந்த எண்ணை குறிப்பிட வேண்டும்.

20.4 எல்லா கடிதப் போக்கு வரத்துகளிலும் கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள கடன் கொடுப்பவரின் விலாசத்திற்கு அனுப்ப வேண்டும்.

21.0 செல்லத் தகாத பகுதி

இந்த ஒப்பந்த்தின் ஏதாவது ஒரு பகுதி அல்லது மனுக்களின் ஒரு பகுதி செல்லாது என்று ஒப்பந்த காலத்தில்) அரசின் நடவடிக்கையால் ஏற்பட்டால் அத்தருங்களில் அந்த செல்லத்தகாத பகுதியை அமுல்படுத்த முடியாது. ஆனால், ஒப்பந்தத்தில் உள்ள மீதமுள்ள எல்லா நிபந்தனைகளுமே அமுலில் இருக்கும். மாற்றியமைக்கப்பட்ட நிபந்தனைகள் செல்லத்தக்கதாகும். அது அசலில் உள்ள ஷரத்துக்கள் போல் ஆகும்.

22.0 சட்டம், நடுவர் ஆள்வரை

அ) இந்த ஒப்பந்தம் அமுலில் இருக்கும் போது ஏற்படும் தகராறுகள் கருத்து வேறுபாடுகளை ஒரு நடுவருக்குத் தெரிவித்து ஆர்பிட்ரேஷன் & கன்சிலியேஷன் 1996 சட்டப்படி பைசல் செய்து கொள்ள வேண்டும். அந்த நடுவரை கடன் கொடுப்பவர் நியமிப்பார். அவருடைய தீர்ப்பு கடன் பெறுபவர் மற்றும் உத்திரவாதம் அளிப்பவரை கட்டுப்படுத்தும்.

ஆ) நிபந்தனை 14-இல் சொல்லியபடி கடன் பெறுபவர் தவறு செய்திருந்தால் அதுவும் ஆர்பிட்ரேஷனுக்காக பயன்படுத்தப்படும். இறப்பு மற்றும் ஒப்பந்தத்தைத் தொடர இயலாமை அகிய காரணங்களுக்காக நடுவருக்கு தெரியபத்துதலும் இந்த ஒப்பந்தத்தின் ஒரு நிபந்தனை ஆகும். மேலும் நடுவர் இறந்து விட்டால் வேறு ஒருவரை அமர்த்த கடன் கொடுப்பவருக்கு உரிமையுண்டு. அந்த நபர் எந்த இடத்தில் அவருக்கு முன்னால் இருந்த நடுவர் விட்டு சென்றாரோ அதைத் தொடருவார்.

இ) இந்த நடுவர்மன்றம் சென்னையில் அமைக்கப்படும். இந்த நடுவர் மன்றம் ஆங்கிலத்தில் இருக்கும்.

ஈ) அவ்வாறு அமைக்கப்பட்ட நடுவர் கடன் பெறுபவர் மற்றும் உத்திரவாதம் அளிப்பவர் அவர்களால் அடமானம் வைக்கப்பட்ட சொத்து அல்லது வேறு செக்யூரிட்டிகள் மீதும் தீர்ப்பு வழங்க உரிமையுண்டு.

உ) கடன் கொடுப்பவர் மற்றும் கடன் பெறுபவருக்கு இடையே ஏற்படும் எல்லா அறிவிப்புகளும், கடித போக்குவரத்துகளும் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பப்படும்.

23.0 மொத்த ஒப்பந்தம்

இந்த ஒப்பந்தம் (முதல் மற்றும் 2-வது அட்டவணைகளை சேர்த்து) கடன் கொடுப்பவருக்கு எழுதிக் கொடுத்த எல்லா ஆவணங்கள் ஆகியவை மொத்த ஒப்பந்தம் என்று கருதப்படும்.

24.0 கடன் கொடுப்பவர் அறிவிப்புகள்

கடன் கொடுப்பவருக்கு இந்த ஒப்பந்தம் குறித்து எல்லா விஷயங்களையும் வெளியிடுவதற்கு உரிமையுண்டு என்று கடன் கொடுப்பவரும், உத்திரவாதம் அளிப்பவரும் ஒப்புக் கொள்கின்றனர். மேலும் இவ்வாறான விஷயங்களை நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளுக்குத் தெரியப்பத்துவதை கடன் பெறபவர் தகராறு செய்ய மாட்டேன் என்கிறார்.

25.0 ரத்து செய்தல்

இந்த ஒப்பந்தம் அது ஏற்பட்ட நாளில் இருந்து அமுலில் இருக்கும். அதை கடன் பெறுபவர் அசல், வட்டி மற்றும் எல்லா தொகைகளையும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் செலுத்திய பிறகு ரத்து செய்ய முடியும்.

26.0 மற்றவை

26.1 மொழி

நபர்களுக்கிடையே ஆங்கில மொழி எல்லா கடித போக்குவரத்திற்கும் உபயோகப்படுத்தப்படும்.

26.2 திருத்தங்கள்

இந்த ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகளை மாற்றவோ திருத்தவோ முடியாது. இருப்பினும் நிபந்தனை 2 (2.3) படி வட்டி விகிதம் மேலும் நிபந்தனை 2.11-இல் சொல்லியபடி மாதத்தவணைகள் மாற்றியமைக்கவும் முடியும். மற்ற நிபந்தனைகள் எல்லோரையும் கட்டுப்படுத்தும். எந்த உரிமைகளையோ அல்லது நிபந்தனைகளையோ தள்ளுபடி செய்வது எழுத்து மூலமாக தெரிவிக்கப்பட்டு எல்லா தரப்பினர்களும் கையொப்பமிட்டால் செல்ல தக்கதல்ல.

26.3 திரண்ட உரிமைகள்

கடன் கொடுப்பவருக்கு இந்த ஒப்பந்தத்தின் எல்லா பரிகாரங்களும் இங்கு கொடுக்கப்பட்டாலோ அல்லது உரிமையியல் சட்டம், பொது சட்டம் சுங்கத் துறை, வியாபரம் அல்லது நடைமுறையில் உள்ள எல்லா பரிகாரங்களும் திரண்ட வேறு நிவாரணம் தொடர்ந்து கடைபிடிக்கப்படும்.

26.4 இந்த கடன் ஒப்பந்தம் எல்லா பார்டிகள், தொடர்ச்சியாளர்கள், வாரிசுகள், நிர்வாகஸ்தர்கள் ஆகியவர்களின் பலன்களுக்கும் உத்திரவாதம் அளிக்கும்.

26.5 கடன் கொடுப்பவருக்கு உரித்தான எல்லா உரிமைகள், பரிகாரங்கள் இந்த ஒப்பந்தத்தின் கீழ் அல்லது மற்ற ஒப்பந்தங்கள், ஆவணங்கள்

26.6 இவ்வொப்பந்தத்தின்படி கடன் பெறுபவரின் பொறுப்புகளானது அவரை கூட்டாகவும், தனியாகவும் கட்டுப்படுத்தும்.

27 கடன் பெறுபவரின் ஏற்புரை:

27.1 கடன் பெறுபவர் இவ்வொப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கும் மற்றும் அட்டவணையில் கூறப்பட்டுள்ள அனைத்து விளக்கங்கள் மற்றும் விபரங்களுக்கு கட்டுப்பட்டவராவார்.

27.2 இவ்வொப்பந்தம் மற்றும் இவ்வொப்பந்தத்தின் தொடர்புடைய ஆவணங்களில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விளக்கங்களை கடன் பெறுபவர் அவருக்கு புரிந்த மொழியில் தெளிவாக தெரியப்படுத்தப்பட்டும், அதன் விளைவுகளையும் விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது.

27.3 இவ்வொப்பந்தமானது கடன் கொடுப்பவரின் அங்கீகாரம் / அதிகாரம் பெற்ற அலுவலா் கையொப்பமிட்ட நாளில் ஏற்பட்டதாகவும், அமலாக்கப்பட்டதாகவும் கருதப்படும்.